# யூன் – 29 - வியாழன்
## திருத்தூதர்கள் பேதுரு மற்றும் பவுல்
## நீர் மெசியா, வாழும் கடவுளின் மகன் (மத்.16:16)

### முதல் வாசகம் : திருத்தூதர் பணி 12 : 1 – 11

அக்காலத்தில் ஏரோது அரசன், திருச்சபையைச் சார்ந்த மக்கள் சிலரைப் பிடித்துக் கொடுமைப்படுத்தினான். யோவானின் சகோதரரான யாக்கோபை வாளால் கொன்றான். அது யூதருக்கு மகிழ்ச்சி அளித்ததைக் கண்டு அவன் தொடர்ந்து பேதுருவையும் கைது செய்தான். அது புளிப்பற்ற அப்பவிழா நாள்களில் நடந்தது. அவரைப் பிடித்துச் சிறையில் அடைத்துக் காவல் செய்யுமாறு நான்கு குழுக்களிடம் அவன் ஒப்புவித்தான். பாஸ்கா விழாவுக்குப்பின் மக்கள் முன்பாக அவரது வழக்கை விசாரிக்கலாம் என விரும்பினான். பேதுரு இவ்வாறு சிறையில் காவலில் வைக்கப்பட்டிருந்தபோது திருச்சபை அவருக்காகக் கடவுளிடம் உருக்கமாக வேண்டியது. ஏரோது அவரது வழக்கைக் கேட்பதற்கு முந்தின இரவில், பேதுரு படைவீரர் இருவருக்கு இடையே இரு சங்கிலிகளால் கட்டப்பட்டுத் தூங்கிக் கொண்டிருந்தார். காவலர்கள் வாயிலுக்கு முன் சிறையைக் காவல் செய்துகொண்டிருந்தார்கள். அப்போது ஆண்டவரின் தூதர் அங்கு வந்து நின்றார். அறை ஒளிமயமாகியது. அவர் பேதுருவைத் தட்டியெழுப்பி, "உடனே எழுந்திடும்" என்றுகூற, சங்கிலிகள் அவர் கைகளிலிருந்து கீழே விழுந்தன. வானதூதர் அவரிடம், "இடைக் கச்சையைக் கட்டி மிதியடிகளைப் போட்டுக் கொள்ளும்" என்றார். தூதர் அவரிடம், "உமது மேலுடையை அணிந்து கொண்டு என்னைப் பின்தொடரும்" என்றார். பேதுரு வானதூதரைப் பின் தொடர்ந்து சென்றார். தூதர் மூலமாக நடந்தவையெல்லாம் உண்மையென்று அவர் உணரவில்லை. ஏதொ காட்சி காண்பதாக அவர் நினைத்துக்கொண்டார். அவர்கள் முதலாம் காவல் நிலையையும், இரண்டாம் காவல் நிலையையும் கடந்து நகருக்குச் செல்லும் இரும்புவாயில் அருகே வந்தபோது அது அவர்களுக்குத் தானாகவே திறந்தது. அவர்கள் வெளியே வந்து ஒரு சந்து வழியாகச் சென்றார்கள். உடனே வானதூதர் அவரைவிட்டு அகன்றார். பேதுரு தன்னுணர்வு பெற்றபோது, "ஆண்டவர் தம் வானதூதரை அனுப்பி ஏரோதின் கையிலிருந்து என்னை விடுவித்து, யூத மக்கள் எதிர்பார்த்த எதுவும் நிகழாதவாறு என்னைக் காத்தார் என்று நான் உண்மையாகவே அறிந்துகொண்டேன்" என்றார்.

**பதில்பாடல் :** எல்லா வகையான அச்சத்தினின்றும் ஆண்டவர் என்னை விடுவித்தார்

### இரண்டாம் வாசகம் : 2 திமோத்தேயு 4 : 6 – 8

என் பிள்ளைகளே ஏனெனில், நான் இப்போதே என்னைப் பலியாகப் படைக்கிறேன். நான் பிரிந்து செல்ல வேண்டிய நேரம் வந்து விட்டது. நான் நல்லதொரு போராட்டத்தில் ஈடுபட்டேன் என் ஓட்டத்தை முடித்துவிட்டேன். விசுவாசத்தைக் காத்துக்கெண்டேன்.
இனி எனக்கென வைக்கப்பட்டிருப்பது நேரிய வாழ்வுக்கான வெற்றி வாகையே. அதை இறுதி நாளில் ஆண்டவர் எனக்குத் தருவார் நீதியான அந்த நடுவர் எனக்கு மட்டுமல்ல, அவர் தோன்றுவார் என விரும்பிக் காத்திருக்கும் அனைவருக்குமே தருவார்.

### நற்செய்தி : மத்தேயு 16 : 13 – 19

அக்காலத்தில் இயேசு, பிலிப்புச் செசரியா பகுதிக்குச் சென்றார். அவர் தம் சீடரை நோக்கி, "மானிடமகன் யாரென்று மக்கள் சொல்கிறார்கள்?" என்று கேட்டார். அதற்கு அவர்கள், "சிலர் திருமுழுக்கு யோவான் எனவும் வேறு சிலர் எலியா எனவும் மற்றும் சிலர் எரேமியா அல்லது பிற இறைவாக்கினருள் ஒருவர் என்றும் சொல்கின்றனர்" என்றார்கள். "ஆனால் நீங்கள், நான் யார் எனச் சொல்கிறீர்கள்?" என்று அவர் கேட்டார். சீமோன் பேதுரு மறுமொழியாக, "நீர் மெசியா, வாழும் கடவுளின் மகன்" என்று உரைத்தார். அதற்கு இயேசு, "யோனாவின் மகனான சீமோனே, நீ பேறு பெற்றவன். ஏனெனில் எந்த மனிதரும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை மாறாக விண்ணகத்திலுள்ள என் தந்தையே வெளிப்படுத்தியுள்ளார். எனவே நான் உனக்குக் கூறுகிறேன் உன் பெயர் பேதுரு இந்தப் பாறையின்மேல் என் திருச்சபையைக் கட்டுவேன். பாதாளத்தின் வாயில்கள் அதன்மேல் வெற்றி கொள்ளா. விண்ணரசின் திறவுகோல்களை நான் உன்னிடம் தருவேன். மண்ணுலகில் நீ தடைசெய்வது விண்ணுலகிலும் தடைசெய்யப்படும். மண்ணுலகில் நீ அனுமதிப்பது விண்ணுல கிலும் அனுமதிக்கப்படும்" என்றார்.

**தியானம் :** திருச்சபையின் இருபெரும் தூண்களான புனித பேதுரு மற்றும் புனித பவுல் திருவிழாவை திருச்சபை கொண்டாடி மகிழ்கின்றது. கல்வியறிவற்ற சாமானிய மனிதரான கடல் தொழில் புரிந்துவந்த புனித பேதுருவையும், கல்வியறிவில் சிறந்து விளங்கி உலகத்தில் தன்னை உயரிய நிலையில் அடையாளப்படுத்திக் கொண்ட புனித பவுலையும் கடவுள் தன்னுடைய பணிக்காக தேர்ந்து கொள்கின்றார். இதிலிருந்து கடவுள் ஆள்பார்த்து செயல்படுபவரல்ல (தி.ப.10:34) மாறாக அவருடைய பணிக்காக முன்குறித்து வைத்தோரை அவர்களுடைய நிலையிலேயே அழைக்கின்றார். அழைத்தோரை தமக்கு ஏற்புடையோராக்கி, தமது பணிக்காகப் பயன்படுத்துகின்றார் (உரோ.8:30) என்பது நமக்குத் தெளிவாகின்றது. இரண்டாவதாக கடவுள் நம்மை அவருடைய பணிக்காக பயன்படுத்த வேண்டுமென்றால் நம்மை முழுமையாக அவருடைய கைகளில் அர்ப்பணிக்க வேண்டும். நம்முடைய பலம், பலவீனம், அறிவு, திறமைகள் என்று எல்லாவற்றையும் கடவுளுடைய கரங்களுக்கு அர்ப்பணிக்க வேண்டும். கல்வியறிவற்ற, பலவீனமான, இயேசுவை மறுதலித்த பேதுருவை திருச்சபையின் தலைவராக உயர்த்தியது அவருடைய அர்ப்பணிப்பு. இயேசுவோடு நாம் செபத்தில் கொள்ளும் நெருங்கிய உறவு, இணைப்பு நம்மை கடவுளின் உண்மைச் சீடர்களாக மாற்றும். தமஸ்கு வழியில் இயேசுவின் சந்திப்பு புனித பவுலின் வாழ்வை மாற்றியது. உயிர்த்த ஆண்டவரின் சந்திப்பு கோழையான பேதுருவை தைரியமான, ஞானம் நிறைந்த பணியாளராக மாற்றியது. இதைத்தான் திருத்தூதர் பணிகளில் நாம் வாசிக்கின்றோம், “பேருருவும், யோவானும் கல்வியறிவற்றவர்கள் என்பதை தலைமைச் சங்கத்தார் அறிந்திருந்ததால், அவர்களது துணிவைக் கண்டு வியப்படைந்தனர். அவர்கள் இயேசுவோடு இருந்தவர்கள் என்பதையும் உணர்ந்து கொண்டனர்” (தி.ப.4:13). ஆகவே இயேசுவோடு இருக்க நாம் கற்றுக் கொண்டால், கடவுளின் திட்டத்தை அறிந்து அதனை செயலாற்றுவதற்கான தைரியத்தையும், வல்லமையையும் நாம் பெற்றுக் கொள்ளலாம். தூய பேதுரு மற்றும் தூய பவுல் இயேசுவுக்காக இரத்த சாட்சியாய் மரித்து, சான்று பகர்ந்து, நிலை வாழ்வை உரிமையாக்கிக் கொண்டார்கள். தங்கள் உட:லுக்கு மரித்து இயேசுவில் உயிர்த்தெழுந்தார்கள். கோதுமை மணியைப்போல இந்த மண்ணில் மடிந்து மிகுந்த பலன் கொடுத்தார்கள். அவர்களைப்போல நாமும் இந்த உடலுக்கு, நமது அகந்தை, ஆணவம், படிப்பு, பதவி இவற்றிற்கு இறப்போம், இயேசுவோடு செபத்தில் ஒன்றித்து இருப்போம், இயேசுவின் சாட்சிகளாய் வாழ்ந்து விண்ணக வாழ்வை உரிமையாக்கிக் கொள்வோம்.